

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.12.2025) சென்னையில் நடைபெற்ற தியாகராயநகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி அவர்களின் மகன் சிபி – வர்ஷா (எ) வர்ஷலட்சுமி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.12.2025 அன்று சென்னை திருவான்மியூரில் நடைபெற்ற தியாகராயநகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி அவர்களின் மகன் சிபி வர்ஷா (எ) வர்ஷலட்சுமி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### திருநங்கைகள் – மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் முன்னேறுவதற்கான சூழலை உருவாக்கும் நோக்கில்

# “எல்லோருக்கும் எல்லாம்” எனும் தலைப்பில் விழிப்புணர்வுப் போட்டிகள்!

## செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் நடத்துகிறது!

**சென்னை, டிச. 18 -**

**முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள், “சமூகம் என்பது அனைவருக்கும் சம உரிமையும் சம வாய்ப்பையும் வழங்கும் ஒரு குடும்பம்” என்று வலியுறுத்திய நிலையில், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் முழுமையாக இணைந்து முன்னேறுவதற்கான சூழலை உருவாக்கும் நோக்குடன், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் “எல்லோருக்கும் எல்லாம்” என்ற தலைப்பில் விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்தவுள்ளது.**

**அதன் விவரம் வருமாறு:**

சமூகத்தில் திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சம உரிமையுடனும், பாதுகாப்புடனும், மரியாதையுடனும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேறுவதற்கான சூழலை உருவாக்குவது திராவிட மாடல் அரசின் முக்கிய இலக்காகும். இந்த இலக்கை அடைய, அரசு கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட பல துறைகளிலும் சிறப்பு நலத்திட்டங்களைக் கொண்டு வந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வருகிறது.

திருநங்கை நல வாரியம் நிறுவுதல், இலவசப் பாலின மாற்று அறுவைச் சிகிச்சை, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், உதவித் தொகைத் திட்டங்கள், அடையாள அட்டை வழங்குதல், அரசு வீடுகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற சலுகைகளை வழங்கி, அரசு அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகிறது. அண்மைக் காலமாக அரசின் மனிதநேயம், சமூக நீதி, சமத்துவம், சமூக இணைப்பு முயற்சிகள் மேலும் வலுப்பெற்று, திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்கள் திறமைகளையும் வாழ்வியல் முன்னேற்றத்தையும் பெருமையுடன் வெளிப்படுத்தும் புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிலைநாட்டி, அவர்களின் வாழ்வை மேம்படுத்தும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் “தமிழ்நாடு உரிமைகள் திட்டம்”. இது, மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டங்களுக்காக அரசு அலுவலகங்களுக்குச் சென்று அலைய வேண்டிய தேவையைப் போக்கி, அவர்கள் வீட்டிலிருந்தே அனைத்துச் சேவைகளையும் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, நலத்திட்டங்களுக்கான விண்ணப்பங்கள், செவித்திறன் கருவிகள் (Hearing Aids) உள்ளிட்ட உதவி உபகரணங்கள், மருத்துவ மதிப்பீடு, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல், அத்துடன் மனநல ஆலோசனை மற்றும் ஆரம்பத் தலையீடு சேவைகள் போன்ற அனைத்து முக்கிய மறுவாழ்வு உதவிகளையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்ட உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பின் விளைவாக, மாற்றுத்திறனாளிகள் இனி ஊராட்சிகள், நகராட்சி,




மாநகராட்சி ஆணையங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் மூலமாகவோ அல்லது நியமனம் மூலமாகவோ நேரடி பிரதிநிதித்துவம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கு சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருள்கள் விநியோகம் செய்யும் பொருட்டு, “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அது மட்டுமின்றி தமிழ்நாடு அரசு, பாராஒலிம்பிக் வீரர்களை ஊக்குவிப்பதிலும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது. குறிப்பாக, பதக்கம் வென்ற வீரர்களுக்கு வழங்கும் ஊக்கத்தொகை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். சர்வதேசப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் வீரர்களுக்கு மற்ற மாநிலங்களுக்கு நிகராக, அல்லது அதிகமாக, தமிழ்நாடு அரசு பெருமளவிலான பணப் பரிசுகளை வழங்குகிறது. இது வீரர்களுக்கு மிகப் பெரிய அங்கீகாரமாகும்.

சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்ட அரசின் தீவிர முயற்சி களைப் பிரதிபலிக்கும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் “எல்லோருக்கும் எல்லாம்” என்ற தலைப்பில் விழிப்புணர்வு போட்டிகள் நடத்தவுள்ளது.

**போட்டிகளும் அதன் விதிமுறைகளும் பின்வருமாறு:**

**1.என் வாழ்வை மாற்றிய அரசுத் திட்டம்**

திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக பிரத்யேகமாக நடத்தப்படும் இந்த போட்டிகளின் நோக்கம் என்னவெனில், உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் அரசுத் திட்டம் அல்லது முன்னெடுப்பு குறித்த உங்கள் அனுபவத்தைப் பின்வரும் படைப்பு வடிவங்களில் ஒன்றைத் தேர்வு செய்து அதன் மூலம் வெளிப்படுத்தலாம்.

**கட்டுரைப் போட்டி – அதிகபட்சம் 2 பக்கங்கள் (word/pdf)**

ரீல்ஸ் போட்டி - 60 - 90 வினாடிகளில்

**2.திறமை தேடல் போட்டி**

a) திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களது தனித் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக வீடியோ/ரீல்ஸ் பதிவு செய்து அனுப்பவும்.

b) சமூகத்திற்கு நீங்கள் ஆற்றிய பங்களிப்பை வெளிப்படுத்தும் விதமாக வீடியோ/ரீல்ஸ் பதிவு செய்து அனுப்பவும்.

**3. வினாடி வினா போட்டி**

திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த வினாடி வினா போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**4. இணைந்து உயர்வோம் (Let’s Rise Together)**

மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கை களுக்கான திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவோ அல்லது உங்கள் பகுதியில் உள்ள அரசு/தனியார் மாற்றுத்திறனாளிகள் பள்ளிகள் குறித்த தகவலை ரீல்ஸ் வடிவில் எடுத்து அதனை TNDIPR சமூக வலைதளங்களை Tag செய்து #LeaveNoOneBehind என்ற hashtag-ஐ பயன்படுத்தி உங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரவும்.

போட்டியில் கலந்துகொள்பவர்கள் தங்கள் படைப்புகளை இம்மாத இறுதிக்குள், மின்னஞ்சல்/QR Code/ Whatsapp பயன்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

1. மின்னஞ்சல்: tndiprmhdec@gmail.com
2. விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code):
3. வாட்ஸ்அப் எண் (Whatsapp No): ஊடக மையத்தின் வாட்ஸ்அப் எண் 9498042408-க்கு ஒரு ‘ஹாய்’ (Hi) அனுப்பி லிங்கைப் பெறுங்கள்.

இவ்வாறு அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டிச.20, 21 – நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்கள் சுற்றுப் பயணம்!

# ‘பொருநை’ அருங்காட்சியகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## 44,924 பயனாளிகளுக்கு – 101 கோடி ரூபாய் மதிப்பில் – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்! அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

**நெல்லை, டிச.18 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் 2 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து 538 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளை துவக்கி 44,924 பயனாளிகளுக்கு 100 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார் என நெல்லையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.**

திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் வரும் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ரூபாய் 67.25 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகம் மற்றும் புதிய திட்டங்கள்,முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைக்கிறார்கள்.

நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மைதானத்தில் அரசு விழாவிற்கான பிரமாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்தப் பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன் கான், முன்னாள் எம்.பி. ஞான திரவியம், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே. ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிடம்,பொருநை அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்கள்.



பின்னர் அரசு விழா குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனையும் மேற்கொண்டனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

திராவிட மாடல் முதல்வர் அவர்கள் வருகிற 20-12-2025 மற்றும் 21-12-2025 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்கள்.

20-ஆம் தேதி சனிக்கிழமை மதியம் வரும் முதலமைச்சர் அவர்களுக்கு கட்சியினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். இதனையடுத்து முதல்வர் அவர்கள் பாளையங்கோட்டை டக்ரம்மாள் புரத்தில் கிறிஸ்தவநல்லெண்ண இயக்கம் நடத்தும் கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொள்கிறார்.

முதலமைச்சர் அவர்கள் மறுநாள் 21-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து பார்வையிடுகிறார்கள். தொடர்ந்து அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 72.10 கோடி மதிப்பீட்டில் இதயம், நரம்பியல், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் சிகிச்சைகளுக்கான மேம்பாட்டு மருத்துவமனை கட்டிடத்தையும் திறந்து வைத்து விழா மேடைக்கு வரும் முதலமைச்சர் அவர்கள் விழாவில் 538.48 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டப்பணிகள், முடிவுற்ற பணிகளைத் துவக்கி வைக்கிறார்கள்.

தொடர்ந்து அரசு விழாவில் 44,924 பயனாளிகளுக்கு 100 கோடியே 95 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி 50க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து விழா பேருரையாற்றுகிறார்கள். மேலும் உழவர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்பாகவும் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கபடுகிறது. விழாவில் 50,000 பேர்கள் பங்கேற்கும் வகையில் மேடை பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

மாநகரப் பகுதிகளில் புதிய சாலை அமைப்பதற்கான நிதி முதலமைச்சர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. வந்தவுடன் சாலைகள் அமைக்கப்படும். மழை காலங்கள் முடிந்துவிட்டது. இன்னும் ஒரு சில நாட்களில் சாலை அமைக்கும் பணி தொடங்கும். பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நெல்லை மாநகர பகுதிகளில் நடந்து வருகிறது. வீட்டு இணைப்பு கொடுக்கும் பணியும் நடந்து வருகிறது. அதன் காரணமாக சாலைகள் புதிதாக அமைக்கப்படாமல் பேட்ச் ஒர்க் நடந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு கூறினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக், பேச்சிபாண்டியன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் மேயர் சரவணன், பரமசிவ அய்யப்பன், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், சுரேஷ்,கிரிஜா குமார், மாநகர பொறுப்பாளர்கள் மேற்கு சு. சுப்பிரமணியன், கிழக்கு தினேஷ், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்தியானந்த், ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், செல்வ கருணாநிதி, அலெக்ஸ் அப்பாவு, சுபாஷ் தங்கபாண்டியன், அன்பழகன், வேலங்குளம் கண்ணன், நகர செயலாளர் கணேசன், பகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் சங்கர். அண்டன் செல்லதுரை, அணி அமைப்பாளர்கள் பிரேம் ஆனந்த், ராஜா சங்கரலிங்கம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் இளைஞரணி மீரான்மைதீன், வேல்முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.